Koviloor Digital Library

அழகப்பா பல்கலைக்கழகம்
வளர் தமிழ் நூலகம்
காரைக்குடி

யோகமும்

அதன் நோக்கங்களும்

ஸ்ரீ அரவிந்தர்

Gifted VTN093
By
ஸ்ரீ ஆர். எம். வள்ளியப்பச் செட்டி
மாதவ நிலையம்,
கழனிவாசல், காரைக்குடி.

ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்
புதுச்சேரி-2

Koviloor Digital Library

The Yoga and its Objects

என்ற ஸ்ரீ அரவிந்தரின் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு

தமிழாக்கம் : ச. மகாலிங்கம்

முதற் பதிப்பு : 1981
இரண்டாம் பதிப்பு : 1985

© ஸ்ரீ அரவிந்த ஆசிரம டிரஸ்ட், 1985
வெளியிடுவோர்: ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்
பப்ளிகேஷன் டிபார்ட்மெண்ட், புதுச்சேரி - 605 002
அச்சிடுவோர் : ஸ்ரீ அரவிந்த ஆசிரம அச்சகம்
புதுச்சேரி - 605 002

Koviloor Digital Library

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

ஸ்ரீ அரவிந்தரின் குறிப்பு

'யோகமும் அதன் நோக்கங்களும்' பற்றி 28-10-34இல் ஸ்ரீ அரவிந்தர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: ''இந்த நூல் ஸ்ரீ அரவிந்தரது யோக சாதனையில் ஓர் ஆரம்பக் கட்டத்தையே விளக்குகிறது. 20 ஆண்டுகளுக்குப்பின், யோகம் இன்று பெற்றுள்ள வடிவில், நூலின் சிறு பகுதியே அதற்கு இசைந்ததாக உள்ளது''.

Alagappa University Central Library
37431

ALAGAPPA UNIVERSITY LIBRARY KARAIKUDI.

Koviloor Digital Library

Koviloor Digital Library

யோகமும் அதன் நோக்கங்களும்

நாம் பயிலும் யோகம் நமக்காக மட்டுமன்று, அது கடவுளுக்காகவே. இந்த யோகத்தைப் பயில முக்தி இன்றி யமையாதது; ஆனால், சொந்த முக்தியே அதன் நோக்க மன்று; மனித இனத்தின் விடுதலையும் திவ்ய மாற்றமுமே அதன் நோக்கம். சொந்த ஆனந்தம் அதன் நோக்கமன்று; தெய்வ ஆனந்தத்தை—கிறிஸ்துவின் பரலோக இராஜ்யத்தை, நமது சத்திய யுகத்தை—புவிமீது கொண்டு வருவதே அதன் நோக்கம்.

நமக்காக முக்தி தேவையில்லை; ஏனெனில், ஆத்மா நித்ய முக்தன், நாம் கட்டுண்டிருப்பதாக நினைப்பது மாயை. கட்டுண்டிருப்பதாக விளையாடுகிறோம்; நாம் உண்மையாகவே கட்டுண்டிருக்கவில்லை. கடவுள் நினைத்த போது நாம் விடுதலையடையலாம். ஏனெனில், அவனே, நமது பரம ஆத்மாவாகிய அவனே, உலக லீலையின் தலைவன். அவனுடைய அருளும் ஆணையுமின்றி எந்த ஆன்மாவும் லீலையிலிருந்து விலக முடியாது.

பெரும்பாலும் மனத்தின்மூலம் அஞ்ஞானத்தின் இரட்டைகளாகிய சுகம் துக்கம், இன்பம் துன்பம், புண்ணியம் பாவம், போகம் துறவு ஆகியவைகளை அனுபவிக்கவேண்டுமென்பது நம்மிலுள்ள கடவுளின் சித்தம். பல நாடுகளில் யோகத்தைப் பற்றிய நினைப்பேயின்றி யுகம் யுகமாக இந்த லீலையை அவன் சலிக்காது செய்துகொண்டிருக்கிறான்.

Koviloor Digital Library

இதில் தீயதொன்றுமில்லே; நிந்திப்பதற்கோ கூசிப் பின் வாங்குவதற்கோ ஒன்றுமில்லே—அது கடவுளின் லீலே.

இந்த உண்மையை உணர்ந்தவன், தான் முக்தன் என்பதை உணர்ந்துகொண்டே கடவுளின் லீலேயில் பங்கு கொண்டு, லீலேயின் முறைகளே மாற்றுவதற்கு அவ னுடைய ஆணேக்காகக் காத்திருப்பவன்—அவனே ஞானி.

இதோ ஆணே பிறந்துவிட்டது. கடவுள் தனக்கென ஒரு நாட்டைத் தேர்ந்தெடுத்து, அங்கு எல்லா ஆபத்து களுக்கிடையிலும், சிலர்மூலமோ, பலர்மூலமோ உயர் ஞானத்தை வைத்துக் காக்கிருன். இப்போதைக்கு, இந்தச் சதுர்யுகத்திற்காவது, அந்த நாடு இந்தியாவாகும். எப் போதெல்லாம் அவன் அஞ்ஞானத்தில், இரட்டைகளில், போராட்டம், சினம், கண்ணீர், பலவீனம், சுயநலம், தாமசிய இராஜச இன்பங்களில்—சுருக்கமாகக் கலியின் ஆடலில் — முழு இன்பம் காண விரும்புகிருனே அப்போ தெல்லாம் அவள் அவனது லீலேயின் இந்த இயக்கத்தில் தலேயிடாது தன்னுள்ளே அடங்கி இருக்கும்படிக்கு அவன் இந்தியாவின் ஞானத்தை மங்கச் செய்து அவளேப் பல வீனத்திலும் கீழ்மையிலும் தள்ளுகிருன். அந்தச் சேற்றிலி ருந்து எழவும், நரனிலுள்ள நாராயணன் மீண்டும் சக்தி யும் ஞானமும் ஆனந்தமும் பெறவும் அவன் விரும்பும் போது, அவள்மூலம் ஞானமும் சக்தியும் ஆனந்தமும் உலகம் முழுவதும் பரவுவதற்காக அவன் மீண்டும் இந்தியா மீது ஞானத்தைப் பொழிந்து அவளே எழுப்பு கின்ருன்.

ஞானத்தின் இயக்கம் சுருங்கும்போது இந்தியாவின் யோகிகள் உலகிலிருந்து விலகி தங்களுடைய சொந்த முக்திக்காகவும், ஆனந்தத்திற்காகவும் அல்லது சில சீடர் களின் முக்திக்காகவும் யோகம் செய்கிருர்கள். ஞானத்தின்

Koviloor Digital Library

இயக்கம் மீண்டும் விரிவடைந்து அதனுடன் சேர்ந்து இந்தியாவின் ஆன்மாவும் விரிவடையும்போது, அவர்கள் திரும்பவும் வெளியே வந்து உலகிலே, உலகிற்காகப் பணி செய்கிருர்கள். ஜனகர், அஜாதசத்ரு கார்த்தவீரியன் போன்ற யோகிகள் உலகின் அரியணைகளில் ஏறி நாடுகளை ஆள்கின்றனர்.

மனிதனில் இறைவனின் லீலை சத்திய யுகத்திலிருந்து கலியுகத்திற்கும், மீண்டும் கலியுகத்திலிருந்து சத்திய யுகத்திற்குமாக ஒரு வட்டத்தில் இயங்குகின்றது. சத்திய யுகம் இசைவு நிரம்பிய யுகம்; அப்பொழுது சில குறிப்பிட்ட சூழ்நிலைகளிலும் எல்லைக்குள்ளும், மனிதன் பூரண நிலையை அடைகிருன். நிலைத்த தூய்மையின் சக்தியால் அவனிடம் இசைவு இயல்பாகவே அமைந்திருக்கிறது. பின்னர், திரேதா யுகத்தில் அது சிதையத் தொடங்குகிறது; தனி மனிதனின் இச்சா சக்தியைக் கொண்டும் சமுதாயத்தின் இச்சா சக்தியைக் (will) கொண்டும் ஒரு வகையாக நிலைநாட்டப்படுகிறது. துவாபர யுகத்தில் இசைவு மேலும் சீர்குலைகிறது. அப்பொழுது மனிதன் அறிவின் கட்டுப்பாட்டின்மூலமும், பொது உடன்பாட்டின்மூலமும், சட்டங்கள் மூலமும் அதைக் காக்க முயல்கிருன். கலியுகத்தில் அது முற்றிலுமாகச் சிதைந்து அழிந்துபோகிறது.

ஆனல், கலி வெறும் தீமை மட்டுமன்று. புதிய சத்திய யுகத்திற்கும் புதிய இசைவுக்கும் மேலும் முன்னேற்றமான பூரணத்திற்கும் தேவையான சூழ்நிலைகள் இதில் உருவாக்கப்படுகின்றன. இப்போது கழிந்த கலியுகத்தில்—அதன் விளைவுகளில் அது இன்னும் இருந்துகொண்டிருந்தாலும் அதன் காலம் முடிந்து போயிற்று—பழைய ஞானமும் பண்பாடும் மொத்தமாக அழிந்தன. வேதங்களிலும் உபநிடதங்களிலும் பிற புனித நூல்களிலும், உலகின்

Koviloor Digital Library

குழம்பிய சம்பிரதாயங்களிலும் சில துண்டுகளே மிஞ்சியுள்ளன.

ஆனால், புதிய மேல்நோக்கிய இயக்கத்திற்கும் புதிய இசைவை, புதிய பூரணத்தை ஆக்குவதற்கும் முதல் முயற்சிகள் செய்யக் காலம் வந்துவிட்டது. மனித சமுதாயத்தை, மனித அறிவை, சமயத்தை, ஒழுக்க விதிகளைப் பூரணப்படுத்துவதற்காக இவ்வளவு கருத்துகள் தோன்றியுள்ளதற்கு அதுவே காரணம். ஆனால், உண்மையான இசைவு இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அந்தப் புதிய இசைவைக் கண்டுபிடிக்கக்கூடிய நாடு இந்தியா ஒன்றே. ஏனெனில், மனிதனுடைய தற்போதைய இயல்பை மாற்றுவதன்மூலமே — வெறும் சரிக்கட்டுதல் போதாது—புதிய இசைவை உருவாக்க முடியும். அத்தகைய மாற்றம் யோகத்தினாலன்றி முடியாது.

இன்று மனிதனுடைய தன்மையும் விஷயங்களின் தன்மையும் இசைகெட்டுப் போயுள்ளன. மனிதனுடைய உள்ளமும் செயலும் முழுவதுமாக மாற வேண்டும். ஆனால், மாற்றம் உள்ளிருந்து வரவேண்டும், வெளியில் இருந்து அன்று; அரசியல் சமூக அமைப்புகளினாலன்று; சமயங்களினாலும் தத்துவக் கொள்கைகளினாலுங்கூட அன்று. நம்மிடத்திலும் உலகிலும் கடவுளை அறிந்து அந்த அனுபூதியின் அடிப்படையில் வாழ்க்கையை மாற்றியமைப்பதனால் வரவேண்டும். அது பூரண யோகம் ஒன்றாலேயே நிறைவேறும். பூரண யோகம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் செயல்படுவதில்லை—அது முக்தி அல்லது ஆனந்தம் போன்ற உயர்ந்த நோக்கமாயிருந்தாலும் சரி. நம்மிலும் பிறரிடத்தும் தெய்வ மனிதனைத் தோற்றுவிப்பதே அதன் நோக்கம். இந்த நோக்கத்திற்கு ஹடயோக இராஜயோக சாதனைகள் போதா. கர்மம், பக்தி, ஞானம் மூன்றும்

Koviloor Digital Library

இணைந்த முவ்வழியும்கூடப் போதாது. இவற்றிற்கெல்லாம் மேலே போய் பூரண யோகம் பயில வேண்டும்.

நாம், பிற மனிதர், தேவர், அசுரர், தேவகணங்கள், பொருள்கள், நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரே பிரம்மன் என உணர்வதே பூரண யோகத்தின் ஞானம். ஒரே சமயத்தில் சகுணமாயும் நிர்க்குணமாயும், எல்லையுள்ளதாயும் எல்லையற்றதாயும், ஒன்றாயும் பலவாயும் உள்ள பரம்பொருளை, பராத்பர புருஷனை, அனந்தனை, விஸ்வநாதனை, மேலேயுள்ள தெய்வங்களில் மட்டுமன்றி கீழேயுள்ள மனிதனிலும், புழுவிலும், மண்கட்டியிலும் உள்ளுறைந்து அவற்றை இயக்கிவரும் இறைவனைச் சரணடைதலே இந்த யோகத்தின் பாவனையும் செயல்முறையும் ஆகும்.

சரணம் முழுமையாக இருக்கவேண்டும், சிறிதும் ஒளிவு கூடாது; எந்த ஆசையும் கோரிக்கையும் சொந்த அபிப்பிராயமும் கூடாது; இது இருக்கலாம், அது இருக்க முடியாது, இது செய்யத்தக்கது, அது செய்யத் தகாதது என்பன போன்ற சொந்தக் கருத்துகள் கூடாது. அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்துவிடவேண்டும். இதயத்திலிருந்து எல்லா ஆசைகளையும், புத்தியிலிருந்து தன்னிச்சையையும் துடைத்துவிடவேண்டும்; விருப்பு வெறுப்புகளை விட்டுவிடவேண்டும். காணும் உலகமும், காணா உலகங்களும், அனைத்துமே மறைவாயுள்ள ஒரு திவ்ய ஞானம், வல்லமை, ஆனந்தம் இவற்றின் வெளிப்பாடே என்று உணர வேண்டும்; பூரண அன்பும், வல்லமையும், ஞானமும் கொண்ட தெய்வ சக்தி நம்மில் செயல்பட்டு தனது லீலையை நிறைவேற்றிவைக்கும் பொருட்டு, இயக்குகிறவனின் விருப்பப்படி இயங்குகிற இயந்திரத்தைப்போல நமது ஜீவன் முழுவதையும் அதனிடம் கொடுத்துவிடவேண்டும். தெய்வ வாழ்வின் பூரண ஆனந்தம், பூரண

Koviloor Digital Library

சாந்தி, பூரண ஞானம், பூரணச் செயல் ஆகியவற்றைப் பெற—நாம் இறுதியில் இவற்றைப் பெறவேண்டும் என்பதே கடவுளின் விருப்பம்—அகங்காரத்தை முற்றிலும் நாசம் செய்துவிட வேண்டும்.

இந்தப் பூரண சரணகத பாவனையை அரைகுறையாக நிறைவேற்ற முடிந்தாலும் யோகக் கிரியைகளின் தேவை இல்லாது போய்விடும். ஏனெனில், அப்பொழுது கடவுளே நம்மில் சாதகனுகவும் சித்தனுகவும் விளங்குவான்; அவனுடைய திவ்ய சக்தி நம்மில் வேலைசெய்யும். அது நமது செயற்கையான சாதனை முறைகளைப் பின்பற்றுது, பூரண அறிவும், அனைத்தையும் ஊடுருவிக் காணும் பார்வையும், தவருத் திறனும் கொண்ட ஓர் இயற்கை முறைப்படி செயல்படும். மிகச் சக்திவாய்ந்த இராஜயோக சாதனையும், மிகத் தேர்ந்த பிராணுயாமமும், மிகத் தீவிரமான தியானமும், மிகப் பரவசம்கொண்ட பக்தியும், முற்றிலும் சுயநலமற்ற கர்மமும், மிக்க வல்லமை உடையவைதாம், பெரும் பயன் தருபவைதாம் என்ருலும், தெய்வ சக்தியின் இந்த வேலையுடன் ஒப்பிடும்போது பலம் குறைந்தவைகளே ஆகும். ஏனெனில், அவையெல்லாம் நமது திறமையின் அளவால் ஓரளவிற்கு மட்டுப்படுகின்றன; ஆனுல், இந்த சக்தியின் செயல்திறனுக்கு எல்லையில்லை. ஏனெனில், அது கடவுளின் வல்லமை. அதற்கு எல்லை வகுத்துக்கொள்வது அவனுடைய சித்தம் ஒன்றே; ஏனெனில், உலகிற்கு எது நல்லது, உலகிலும் உலகிற்குப் புறம்பாகவும் நம் ஒவ்வொருவருக்கும் எது நல்லது என்பதை அவன் சித்தமே அறியும்.

இந்த யோகத்தின் முதல் செயல்முறை ஆத்ம சமர்ப்பண சங்கல்பமே. உனது முழு உள்ளத்தோடும் உனது முழு பலத்தோடும் உன்னை இறைவனின் கரங்களில் ஒப்

Koviloor Digital Library

படைத்துவிடு. நிபந்தனை எதுவும் விதிக்காதே, எதையும் கேட்காதே, யோகத்தில் சித்திபெறவேண்டும் என்றுகூடக் கேட்காதே. உன்னிடமும், உன்மூலமும் அவனுடைய சித்தம் நிறைவேறவேண்டும் என்பதைத் தவிர வெறெதையும் கேட்காதே. கோரினருக்குக் கோரிய வரங்களையெல்லாம் அருளும் பெம்மான் ஏதும் கோராமல் தம்மையே தனக்களிக்கும் தமருக்கு அவர்கள் கேட்டிருக்கக்கூடிய அனைத்தையும் தருவதோடு தன்னையே அளித்து தனது அன்பிற் பூத்த வரங்களையெல்லாம் வழங்குகிருன்.

யோகத்தின் இரண்டாவது செயல்முறை, விலகிநின்று தெய்வ சக்தி உன்னிடம் வேலை செய்வதைக் கவனித்தலாகும். அவ்வேலை நடக்கும்போது அடிக்கடி உன்னுள் கலக்கமும் தொல்லையும் ஏற்படும். ஏனென்ருல், உன்னிடம் வெளிப்படையாகவோ இரகசியமாக மறைந்தோ இருக்கக் கூடிய அசுத்தமெல்லாம் முதலில் கிளம்பும்; அவற்றைத் துப்புரவாகத் துடைத்துத் தள்ளும்வரை கிளம்பிக்கொண்டேயிருக்கும். ஆகவே நம்பிக்கை (faith) அவசியம்; பூரண நம்பிக்கை உடனே வந்துவிடுவது அரிதென்ருலும், நம்பிக்கை மிகவும் தேவையாகும்.

சந்தேகம் இக்காலத்தில் எங்கும் பரவியுள்ள ஓர் அசுத்தமாகும். சந்தேகம் உன்னைத் தாக்கியபோதிலும், விலகி நின்று, அது கடந்து செல்லும்வரை காத்திரு. இவ்வழியில் முன்னேறியவர்களின் சத்சங்கம் கிடைத்தால் அதைப் பயன்படுத்திக்கொள். சத்சங்கம் கிடைக்கவில்லையெனில் பரவாயில்லை; யோகத் தத்துவமாகிய சரணுகதத்தை இன்னும் கெட்டியாகப் பிடித்துக்கொள். உள்ளே துயர் மண்டிய போதும் வெளியிலிருந்து தாக்குதல்கள் வந்துற்றபோதும் கீதையின் மகா வாக்கியத்தை நினை:

Koviloor Digital Library

> ''உள்ளத்தாலும் மனத்தாலும் உன்னை என்னிடம்கொடுத்துவிடு. என்னருளால் எல்லா இடர்களையும் ஆபத்துகளையும் தாண்டிவிடுவாய்.''* ''அறங்கள் அனைத்தையும் விட்டு விட்டு, என்னை மட்டும் சரணடை. நான் உன்னை எல்லாத் தீமை பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன் — வருந்தாதே.''

''நான் விடுவிப்பேன்.'' பொறுப்பு உன்னுடையது போலவும், பலன் உனது முயற்சிகளைச் சார்ந்திருப்பது போலவும் நீ போராடவும் தொல்லைப்படவும் வேண்டாம். உன்னை விட அனந்தம் மடங்கு வல்லமையுள்ள ஒரு சக்தி அதைக் கவனிக்கிறது. நோய், விபத்து, உன்னுள் கிளர்ந்தெழக் கூடிய பாவம், அசுத்தம் இவை எதுவும் உனக்குக் கிலியூட்டக் கூடாது. அவனைமட்டும் சிக்கெனப் பிடித்துக் கொள். ''நான் உன்னை எல்லாத் தீமை பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன்.''

ஆனால், விடுதலை திடீரென ஓர் அற்புத நிகழ்ச்சிமூலம் வருவதில்லை. அது தூய்மை செய்யும் முறையால் வரும்; இவையெல்லாம் அந்த முறையில் ஒரு பாகமே. நீண்ட நாள் கூட்டாமல் கிடந்த ஓர் அறையைக் கூட்டினால் தூசுப் படலம் கிளம்புகிறதல்லவா? அது போன்றதே இவையும். தூசு உன்னைத் திணரச் செய்வது போலிருந்

---

* (எல்லா வகையான எல்லாச் சட்டங்கள், விதிகள், முறைகள், நியாயங்கள் அனைத்தையும், அவை உனது பழைய நம்பிக்கை, பழக்கம் முதலியவற்றால் ஏற்பட்டவையாக இருந்தாலும் சரி, பிறரால் திணிக்கப்பட்டவையாக இருந்தாலும் சரி)

Koviloor Digital Library

தாலும் தொடர்ந்து செல். ''மா சுச'', வருந்தாதே.

விலகி நிற்க வேண்டுமானால், நீ உன்னைப் புருஷனாக, உன்னுள் நடப்பதைக் கவனித்து. கடவுளின் வேலைக்கு அனுமதி தந்து, ஆதாரத்தை கடவுளின் சக்திக்குத் தூக்கிப் பிடித்து, கடவுள் தரும் பலன்களை அனுபவிக்க மட்டும் செய்கின்றவனாக அறிய வேண்டும். வேலை சக்தியாக உள்ள கடவுளால், காளியால், செய்யப்படுகிறது. அவள் அதை ஸ்ரீ கிருஷ்ணனுக்கு யாகமாக அர்ப்பணிக்கிறாள். நீ யாகத்தை செய்யச் செய்யும் எஜமானன். யாகத்தின் ஒவ்வொரு கிரியைக்கும் நீ உடனிருக்கவேண்டியது அவசியம். நீயே யாகத்தின் பலன்களை அனுபவிப்பவன். ஆதாரம் இன்னது என்பதை நீ அறிந்தால் வினைகளிலிருந்து உன்னைப் பிரிப்பதும் நீயே கர்த்தா என்னும் எண்ணத்தைத் துறப்பதும் எளிதாகும்.

புத்தியே மனத்தின் மிக உயர்ந்த இயக்கம். அதற்கு மேல் உயர்புத்தி அல்லது விஞ்ஞானம் உள்ளது. அதுவே சத்யதர்மத்தின் (ஞானத்தின்) உண்மை, பாவத்தின் உண்மை, செயலின் உண்மை—இவற்றின் இருப்பிடம்; அதற்கு மேல் ஆனந்தம் உள்ளது; உன்னிடமுள்ள தெய்வ அம்சம் இங்குதான் வதிகிறது. இந்த விஞ்ஞானத்தையும் இந்த ஆனந்தத்தையுமே உன்னுள்ளே உள்ள கடவுளின் இராஜ்யம் என்று கிறிஸ்து குறிப்பிட்டார்.

இப்பொழுது நாம் கீழ் இயக்கங்களில் விழித்தவர்களாகவும் விஞ்ஞானத்திலும் (மெய்யுணர்வு, அதிமனம்) ஆனந்தத்திலும் ஆழ்ந்து உறங்கிக்கொண்டும் இருக்கிறோம். நமது ஜீவனில் இப்போது உறங்கிக் கிடக்கும் உணர்வு நிலைகளையெல்லாம் நாம் விழிக்கச் செய்ய வேண்டும். அவை விழிப்படைந்து அஞ்ஞானக் கலப்பின்றி வேலை செய்வதே யோக சித்தி ஆகும்.

34459

Koviloor Digital Library

அது நிகழும்போது கடவுளில் வதிதல் எனக் கீதை யில் கூறப்படும் அந்த நிலையை நாம் அடைகிறோம். ''உண்மையாகவே நீ என்னில் வதிவாய்'' என ஸ்ரீ கிருஷ்ணன் கூறும்போது இதையேதான் சொல்லுகிறான். அந்த நிலையை அடையும்போது நாம் முக்தியடைந்தவர்களாவோம், அருள்பெற்றவர்களாவோம், நாம் அடைய நினைக்கும் அனைத்தையும் அடைந்தவர்களாவோம்.

யோகத்தின் மூன்றாவது செயல்முறை எல்லாவற்றையும் கடவுளாகக் காண்பதாகும். பொதுவாக, நாம் ஞானத்தில் வளர்ச்சியடையும்போது பெறும் முதலனுபவம் எவ்வித இயக்கமுமற்ற, குணம் குறிகளற்ற ஒரு நிர்க்குண தெய்வ சத்துவம் (existence), சதாத்மன் (sad-atman) எல்லா இடத்தையும் காலத்தையும் நிரப்பிக்கொண்டிருப்பதைக் காண்பது. அதில் நாம ரூபங்கள் உண்மையற்றவைபோல அல்லது மிகச் சிறிய உண்மை போலத் தோற்றும். இந்த அனுபவத்தில் ஒன்றே உண்மை, மற்றவையெல்லாம் குறியற்ற, விளக்க முடியாத மாயையாகத் தோற்றும். ஆனால் நீ, அத்துடன் நின்று, நிர்குண அனுபவத்துடன் உன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால், பின்னால், அந்த ஆத்மாவே படைக்கப்பட்ட எல்லாவற்றையும் தன்னுள் கொண்டு அவற்றைத் தாங்குவதோடு அல்லாமல் அவற்றுள் தானே நிறைந்து அவற்றை உயிர்ப்பித்துக் கொண்டிருப்பதையும் காண்பாய். முடிவில் நாம ரூபங்களும் பிரம்மனே என்பதை அறிவாய். அப்பொழுது நீ மேன்மேலும் உபநிடதங்களும் கீதையும் வாழ்க்கை விதியாக முன்வைக்கும் ஞானத்தில் வாழமுடியும். உள்ளவை அனைத்திலும் ஆத்மாவையும் அனைத்தையும் ஆத்மாவிலும் காண்பாய், 'ஆத்மானும் சர்வ பூதேசு சர்வ பூதானி சாத்மனி'. எல்லாம் பிரம்மனே என்பதை உணர்வாய்—

Koviloor Digital Library

'சர்வம் கல்விதம் பிரம்மா.' ஆனால், உலகம் முழுவதும் ஓர் அனந்த திவ்ய புருஷனின் வெளிப்பாடே, லீலையே, என நீ உணரும் போதே, எல்லாவற்றிலும், படைக்கப் பட்ட அனைத்திற்கும் ஆதாரமான நிர்க்குண சதாத்மனைப் (sad-atman) பார்க்காமல் — அந்த ஞானத்தை இழந்து விடாமலே — தோன்றியுள்ள, தோன்றுதிருக்கின்ற அனைத் திற்கும் ஆதாரமாயும், அவையாயும், அவற்றிற்கு அப்பா லுமாயும் உள்ள ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்கும்போதே இந்த யோகத்தின் சிகரமாகிய அனுபவத்தை நீ பெறுகிறாய். ஏனெனில், சதாத்மனுக்குப் (sad-atman) பின்னால் அசத் தின் மோனம் உள்ளது; அதையே பௌத்த சூன்யவாதிகள் சூன்யமாகக் கண்டனர். அந்த மோனத்திற்கும் அப்பால் பராத்பர புருஷன் உள்ளான். அவனே தன்னிலிருந்து இவ்வுலகைப் படைத்துள்ளான்; அவனே எல்லையற்றவனும் எல்லையுள்ளவனுமான ஈஸ்வரனாக, சிவனாக, நாராயண னாக, தனது பிரேமையால் நம் அனைவரையும் தன்பால் ஈர்த்துக்கொள்கின்ற, தனது அருள் திறத்தால் நம்மை வலிந்திழுத்து நானாவித இவ்வுலகில் களிப்பும் வலிமையும் அழகும் கூடிய தனது நித்திய ஆடலைப் புரிகின்ற லீலா மயனாகிய ஸ்ரீ கிருஷ்ணனாகவும் அதனுள் உறைந்து அதைத் தாங்கி நிற்கின்றான்.

அவனுடைய சச்சிதானந்த ஆடலே இவ்வுலகம். சடப் பொருள்கூட வெறும் சடத்தன்மை கொண்டதன்று, தூலப் பொருளன்று, உணர்வின் வடிவம்—குணம்—என்பதை நீ ஒரு நாள் உணர்வாய். திடத் தன்மை என்பதே குணங் களின் சேர்க்கைதான், ஒட்டுதலும் நிலைத்தலும்தான், உணர்வுள்ள ஜீவனின் ஒரு நிலைதான், வேறொன்றும் இல்லை. அனந்த குணப் பிரம்மனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் சச்சிதானந்தமாக உலகில் ஆடல் புரிவதே சடம், உயிர்,

Koviloor Digital Library

மனம், மனத்திற்கு அப்பால் உள்ளவை எல்லாம். இந்த உண்மை நமக்கு அனுபவம் ஆகும்போது, அதில் உறுதியாக, நிலையாக வாழும்போது, துயரம், பாவம், அச்சம், மயக்கம், அகப் போராட்டம், துன்பம் இவை நம்மை அண்டவே முடியாதபடி நமது ஜீவனிலிருந்து விரட்டப் படும். அப்பொழுது

''பிரம்மானந்தத்தைப் பெற்றுள்ள ஞானிக்கு
உலகில் எதனிடத்தும் அச்சமில்லை''

''அதிமன (விஞ்ஞான) ஞானம் பெற்று உலகுயிர்
களையெல்லாம் தனது ஆன்மாவாக ஒருவன்
உணரும்போது, எல்லாப் பொருள்களையும் ஒன்றுகக்
காணும் அந்த ஞானிக்கு மோகமேது சோகமேது?''

என்னும் உபநிடத மகா வாக்கியங்களிலுள்ள உண்மையை நமது சொந்த அனுபவத்தில் அறிவோம். அப்பொழுது உலகம் முழுவதுமே நமக்குப் புதிய தோற்றம் அளிக்கும்; எல்லாம் சுந்தரம், சிவம், மங்களம், ஆனந்தமாகக் காட்சியளிக்கும்; முடிவற்ற வலிமை, சாந்தி இவற்றின் அடிப்படையில் நடக்கும் ஆனந்த ஆடலாகக் காட்சியளிக்கும். எல்லா ஜீவர்களுடனும் நாம் ஆன்ம ஒருமை அடைவோம். இந்த அனுபவத்தில் நாம் உறுதியடைந்தபோது, நமது தொடர்பால், ஒருமைப்பாட்டால், அன்பின் செயலால் நமது அனுபவம் பிறரிடமும் பரவும்படி செய்கிறோம். இவ்வாறு இந்தப் பிரம்ம நிலையை நமது உலகம் முழுவதும் பரப்பும் ஒரு மையமாக நாம் ஆகிறோம்.

உயிருள்ளவற்றில் மட்டுமல்லாமல் உயிரற்ற சடப் பொருள்களிலும் நாம் நாராயணனைக் காண வேண்டும்,

வள்ளாதமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்

16125

Koviloor Digital Library

சிவனை அனுபவிக்கவேண்டும், சக்தியைத் தழுவவேண்டும். சடத்தைப்பற்றிய தவருன கருத்திஞல் இருளடைந்துள்ள நமது கண்கள் பரஞ்சோதிக்குத் திறக்கும்போது உயிரற்ற பொருள் என்று ஒன்றுமே இல்லை; எல்லாப் பொருள்களும் விளக்கம் பெற்ருே விளக்கம் பெருமலோ, வெளிப்பட்டோ உள்ளடங்கியோ, மறைந்தோ வெளிப்படையாகவோ, உள்ளடங்கிய உணர்வு நிலையாகிய அன்னம் அல்லது சடத்தை மட்டுமல்லாது உயிர், மனம், அதிமனம் ஆனந்தம், சித், சத் அனைத்தையும் தம்முள் கொண்டுள்ளன என்பதைக் காண்பாய். எல்லாவற்றிலுமே சைதன்யமூர்த்தியாகிய இறைவன் உறைந்து குஞனந்தம் பருகிக்கொண்டிருக்கிருன். மலர்கள், பழங்கள், மண், மரங்கள், கனிப்பொருள்களிலெல்லாம் ஓர் களிப்புத் ததும்புவதை நீ உணர்வாய். ஏனெனில், இவை அனைத்துள்ளும் ஸ்ரீ கிருஷ்ணனே பிரவேசித்து வாசம் செய்கிருன்; தூலமாகவன்று, தனது பரநிலையைச் சார்ந்த சித் வடிவில். ஏனெனில், தூலமென்று ஒன்று இல்லை. காலம் இடம் என்பதெல்லாம் சம்பிரதாயங்களே, புலனுணர்வுகளுக்கான ஏற்பாடுகளே, கடவுளின் சிருஷ்டி ஓவியத்தின் காட்சிக் கோணங்களே.

''இவ்வுலகம் முழுவதும், இப்பிரகிருதி உலகின் ஒவ்வொரு பொருளும் இறைவனுக்கு இருப்பிடமாகவே படைக்கப் பட்டுள்ளது.''

எல்லாப் பொருள்களிலும் எல்லா ஜீவர்களிலும் கடவுளைக் கண்டால் போதாது. எல்லா நிகழ்ச்சிகளிலும், எல்லாச் செயல்களிலும், சிந்தனைகளிலும், உணர்ச்சிகளிலும், உன்னிடத்தும், பிறரிடத்தும், உலகம் எங்கணும் நீ அவனைக் காணவேண்டும். இந்த அனுபவத்தைப் பெற இரு விஷயங்கள் தேவையாகும். முதலாவது, உனது செயல்களின் பயனையெல்லாம் அவனுக்குக் கொடுத்துவிட

Koviloor Digital Library

வேண்டும். இரண்டாவது, உனது செயல்களையும் அவனுக்குக்கொடுத்துவிட வேண்டும். உனது செயல்களின் பலனைக் கொடுத்துவிடுவது என்றால் வைராக்கிய மனத்துடன் செயல்களின் பயனிலிருந்து விலகிச் செல்லவேண்டுமென்றோ குறிப்பிட்ட நோக்கத்துடன் செயல்புரியக் கூடாது என்றோ பொருளன்று. அதன் பொருள் இந்த அல்லது அந்தப் பலன் வேண்டும், அல்லது இது அல்லது அது நடக்க வேண்டும், அதற்கு உனது செயல் தேவை என்பதற்காகச் செயல்புரியாமல், அதுவே செய்ய வேண்டிய கடமை என்பதனால், அது நமது ஜீவநாதனின் ஆணை என்பதற்காக, அவன் விரும்பும் பலன் வரட்டும் என்ற உணர்வுடன் செயல் புரியவேண்டும் என்பதே. நீ எதை வேண்டுகிறாய் என்பதை எட்ட வைத்துவிட்டு இறைவன் எதை வேண்டுகிறான் என்பதை அறிய விரும்பவேண்டும். உனது உள்ளம், உனது வேக உணர்ச்சிகள், உனது வாடிக்கையான கருத்துகள் ஆகியவைகளே சரியானவை, தேவையானவை என நம்பாதே. கீதையில் அர்ஜுனன் செய்தது போல, அவற்றைத் தாண்டிச் சென்று, கடவுள் சரியானவை என்று நிர்ணயித்துள்ளதை அறிய நாடு—நீ செய்ய வேண்டிய வேலையை—கர்தவ்யம் கர்மா—நீ செய்துவிட்டால், நீ விரும்பிய, நீ எதிர்பார்த்த விளைவு உண்டாகாதபோதும் எது சரியானதோ எது தேவையானதோ அது நடந்தே தீரும் என்று உறுதியாக நம்பு. உலகை ஆளும் சக்திக்கு உன்னளவுக்காவது அறிவு இருக்கிறது. ஆகவே, உலகை எவ்வாறு நிர்வகிக்கவேண்டும் என்பது பற்றி உன் யோசனையைக் கேட்டேயாகவேண்டும், உன் உதவியை நாடியே ஆகவேண்டும் என்கிற அவசியமில்லை. அதைக் கடவுள் கவனித்துக்கொண்டிருக்கிறார்.

Koviloor Digital Library

'கர்தவ்யம் கர்மா'—செய்ய வேண்டிய வேலே, என்பதென்ன? சொல்வது மிகக் கடினம். சிலர் அதைக் 'கடமை' என்று மொழிபெயர்ப்பார்கள். விளக்கம் கேட்டால், 'நீதி நெறி வழுவாத செயல்' என்பார்கள்—அதாவது மக்கள் நீதி நெறி எனக் கருதுகிற, உன் மனசாட்சிக்குச் சரியெனப்படுகிற, அல்லது சமுதாய நன்மைக்காக, நாட்டு நன்மைக்காக, மக்கள் இனத்தின் நன்மைக்காக நீ செய்ய வேண்டிய செயல்கள். ஆயினும், கடமைபற்றிய இத்தனிப் பட்ட அல்லது சமூகக் கருத்துகள் அஞ்ஞான நிலேயிலுள்ள மனிதருக்கு அவர்களுடைய கொந்தளிக்கும் ஆசைகளேயும் முனேத்த அகங்காரத்தையும் கட்டுப்படுத்தத் தேவைதான் எனினும் இக்கருத்துகளினுல் கட்டுப்பட்ட மனிதன் சமூகத்திற்கு நல்ல மனிதனுக இருக்கமுடியுமே தவிர இந்த யோகத்தின் இலட்சியத்தை ஒருபோதும் அடைய முடியாது. அவன் செய்யப்போகிறதெல்லாம் ஒருவகைப் பயனுசையை விடுத்து இன்னெரு வகைப் பயனுசையைப் பிடித்துக்கொள்வதுதான். ஒருவேளே இவ்வுயர்ந்த பயன்களுக்காக மேலும் மூர்க்கமாக முயற்சி செய்து அவற்றை அடைய முடியாமையால் இன்னும் அதிகமாக வருந்துவான். பரோபகாரியின் வெறிபோல பயங்கரமான வெறி வேறு இல்லே; தனது நற்குணத்தில் பெருமைப்பட்டுக்கொள்ளும் அகங்காரத்தைவிடப் பிடிவாதமான அகங்காரமும் வேறு இல்லே. ஏனெனில், இவ்விரு வகையினரும் தங்கள் அபிப்பிராயத்திலும், சமுதாயத்தின் பார்வையிலும் மிக உயர்ந்தவர்களாகக் காணப்படுவதால் ஓர் உயர்ந்த தர்மத்திற்குப் பணிய வேண்டிய அவசியத்தை அவர்களால் கண்டுகொள்ள முடியாது. இவர்களுக்குப் பயனேப்பற்றிய வருத்தம் இல்லாமலிருந்தாலும், அவர்களுடைய முயற்சிகளில் ரஜோகுணப் போராட்டமும் அளவு

Koviloor Digital Library

மீறிய ஆவலும், அதனால் அயர்வும் ஏற்படும்; முக்குணங்களையும் வென்று திரிகுணாதீதனாகத் திகழாமல் அவர்கள் அக்குணங்களுக்கு அடிமையாகவே இருப்பார்கள்.

தனது சொந்த நற்குணம், சமூகக் கடமை ஆகிய கருத்துகளைப் பாராட்டியே அர்ஜுனன் போர் செய்ய மறுத்தான். அவனுடைய வாதங்களுக்கு எதிராக ஸ்ரீ கிருஷ்ணன் இரண்டு வேறுபட்ட கருத்துகளைக் கூறினான். ஒன்று தாழ்ந்தது; கட்டுண்ட, ஆனால் விடுதலை தேடுகிற மனிதனுக்கு உரியது. இன்னொன்று உயர்ந்தது, முக்தனுக்கு உரியது. ஒன்று சாஸ்திரம். மற்றது நமது செயல்களின் பலனை மட்டுமல்லாது செயல்களையே இறைவனிடம் ஒப்படைத்துவிடுதல். சாஸ்திரத்தினால் ஏற்படும் நன்மை என்னவென்றால், அது நமக்குப் புறத்தே, நமது சொந்த ஆசைகள், அபிப்பிராயங்கள், வெறிகள், பிடிவாதங்கள், சுயநலம், சொந்த இச்சை இவற்றிற்குப் புறம்பான ஓர் அறநெறியை நமக்கு வகுத்துக் கொடுக்கிறது. சரியான மனப்பான்மையுடன் அவற்றைப் பின்பற்றி ஒழுகிவருவதனால் நாம் தன்னடக்கம் பெறுவதோடு சாத்வீக அகங்காரமும் வெகுவாகக் குறைந்து முக்திக்குத் தயாராகிறோம்.

பண்டை நாட்களில் வேத தர்மமே சாஸ்திரமாக இருந்தது. அது மனிதனுடைய உளவியல், உலக விதிகள் இவை பற்றிய ஆழ்ந்த ஞானத்தின் அடிப்படையில் அமைந்தது. மனிதன் தன்னை உணர்ந்து தனது உண்மையான இயல் பின்படி வாழும் வழியை அது அவனுக்குக் காட்டிற்று. பின்னர் தர்ம சாஸ்திரங்கள் வேத ஞானத்தின் அடிப்படையில் மனிதர்களை நான்கு பெரும் பிரிவுகளாக — சாதுர்வர்ணம்—பிரித்து அவர்களுடைய இயல்புகளின்படி அவர்கள் எப்படி வாழவேண்டும் என்று விதிமுறைகளை வகுத்தன. இன்று வர்ணாஸ்ரம தர்மம் உயிரற்ற குருட்டுப்

Koviloor Digital Library

பழக்கமாகவும் அர்த்தமற்ற சமூக ஆசாரமாகவும் ஆகி விட்டது. அது சாத்வீகத் தன்மை கொண்டதாக அல்லாமல் தாமசத் தன்மை கொண்டதாக, முக்திக்கு ஆயத்தம் செய் யும் ஒழுங்கு முறையாக இல்லாமல் அடிமைத்தளையாக இருக்கிறது.

மிக உயர்ந்த சாஸ்திரத்தையும் அகங்கார நோக்கங் களுக்காக — தனது ஒழுக்கச் சிறப்பிலும், தனது விருப்பு வெறுப்புகளிலும் சொந்த அபிப்பிராயங்களிலும் கொள் ளும் அகங்காரப் பற்றுக்காக — தவருகப் பயன்படித்த முடி யும். சரியான முறையில் பயன்படுத்தினுல் முக்திக்கு ஆயத்தம் செய்ய அது மிகச் சிறந்த சாதனமாகும். அது சப்த பிரம்பம். ஆனுல், விடுதலைக்கு ஆயத்தம் செய்வ தோடு நாம் திருப்தி அடைந்துவிட முடியாது. நமது கண் கள் திறந்தவுடன் அசல் விடுதலையை நோக்கி நாம் விரைய வேண்டும். விடுதலை பெற்ற ஞானியும், தனது செயல் களைக்கூட கடவுளிடம் ஒப்படைத்துவிட்ட விடுதலையை நாடும் சாதகனும் மிக உயர்ந்த சாஸ்திரங்களையும் தாண்டி மேலே சென்றுவிடுகின்றனர்.

ஆண்டவனின் ஆணைப்படி பிரகிருதியே எல்லாச் செயல் களையும் செய்கிறது, ஆண்டவனே நமது சுபாவத்தின் மூலம் நமது செயலை நிர்ணயிக்கிருன் என்னும் ஞானமே நமது செயல்களையெல்லாம் ஆண்டவனிடம் ஒப்படைத்து விடுவதற்கு மிகச் சிறந்த அடிப்படையாகும். இந்த ஞானம் ஏற்பட்ட விநாடியிலிருந்து உனது செயல் அவனுடையதாகி விடுகிறது; இனி அது உன்னுடையதன்று, அதன் பொறுப் பும் உன்னதல்ல. பொறுப்பு, கர்ம பந்தம் என்ற பேச்சே இங்கு இல்லை. கடவுளுக்குப் பொறுப்புக் கிடையாது. அவன் எல்லா வகையிலும் ஆண்டான், கட்டற்றவன். சாஸ்திரத்தைப் பின்பற்றி நடப்பவனுடைய செயல்களைப்

Koviloor Digital Library

போல நமது செயல்களும் சுபாவ நியதிப்படி நடக்கும், அதனால் அவை தர்மமாகும் என்பது மட்டுமன்று, நமது சுபாவமும்கூட ஓர் இயந்திரத்தைப்போல கடவுளால் நடத்தப்படும்.

நாம் அஞ்ஞான சம்ஸ்காரங்களினால் நிரம்பி இருக்கிறோம்; அதனால் இந்த உயர்ந்த ஞானநிலையை அடைவது எளிதன்று. ஆனால், விரைவில் அந்நிலையை அடைய மூன்று படிகள் உள்ளன. முதற்படி,

''எனது இதயவாசனாகிய ஏ ரிஷிகேசா! நீ எவ்வாறு பணிக்கின்றாயோ அவ்வாறேநான் செயல்படுகிறேன்

என்ற வாசகத்தின்படி வாழ்தல்.

இந்த வாசகத்தின் தத்துதம் உன்னுடைய அன்றாட வாழ்வில் கலந்து வேர்கொண்டுவிட்டால் இரண்டாம் படியை அடைந்து கீதையின்

''இறைவன் எல்லா ஜீவர்களின் இதயங்களிலும் இருந்துகொண்டு, முக்குண மாயையின்மூலம், இயந்திரத்தில் வைத்துச் சுழற்றுவதுபோல அனைவரையும் ஆட்டுவிக்கிறான்''

என்ற ஞானத்தில் வாழ்வது எளிதாகும். அப்பொழுது முக்குணங்களும் உன்னுள் வேலைசெய்வதையும், வேலை எவ்வாறு நடைபெறுகிறது என்பதையும் காண்பாய். இனியும் 'நான் செய்கிறேன்', என்று சொல்லாமல் 'குணங்களே வேலை செய்கின்றன' என்று சொல்வாய்.

இப்படிகளிலுள்ள ஒரு பெரிய கஷ்டம்—குறிப்பாக முக்குணங்களின் செயலைப் பகுத்தறிய முடிவதற்கு முன்னால் உள்ள கஷ்டம்—என்னவென்றால், உன் சுபாவத்தி

Koviloor Digital Library

லுள்ள அசுத்தம், பாவம் புண்ணியம் என்ற கருத்து உன்னைப் பயமுறுத்தும். நீ உன்னைக் கடவுளின் கைகளில் ஒப்படைத்துவிட்டபடியால் அவன் உன்னிடமுள்ள அசுத்தத்தையெல்லாம் தூய்மையாக்குவான். நீ செய்யவேண்டியது—பாவத்திலோ புண்ணியத்திலோ நீ பற்று வைக்கக் கூடாதாகையால்—கவனமாக இருக்கவேண்டியதொன்று தான். ஏனெனில், அவன் மீண்டும் மீண்டும் தன்னுடைய அபய வசனத்தைக் கொடுத்துள்ளான். ''என் பக்தன் ஒரு நாளும் அழிவதில்லை'' என்று அவன் கீதையில் அபயம் தந்துள்ளான்.

இறைவனை முழுவதும் அறியும்போது அல்லது இறைவனது அருளால் தானாகவே இரண்டாம் படியிலிருந்து மூன்றாம் படி வருகிறது. புருஷன் குணங்களின் செயல்களிலிருந்து பிரிந்து நின்று முக்குணங்களுக்கும் அப்பால் திரிகுணாதீதனாக இருப்பது மட்டுமல்லாமல், பிரகிருதிகூட, குணங்களைப் பயன்படுத்தியபோதிலும் அவற்றால் கட்டுப் படாது சுதந்திரமாயிருக்கும். நாம் அறிந்துள்ள சத்வ குணம் சுத்தப் பிரகாசத்திலும் ஜோதியிலும் மறையும்; இயல்பு முழுவதும் தூய, சுதந்திரமான, அனந்தமான சுயப் பிரகாசத்தில் வாழும். நாம் அறிந்துள்ள தமோகுணம் தூய சமதையிலும் சாந்தியிலும் மறையும்; இயல்பு முழுவதும் அனந்தமான, வருணிக்க முடியாத அமைதியிலும் சாந்தியிலும் உறுதியாகக் கால்கொள்ளும். நாம் அறிந்துள்ள ரஜோ குணம் தூய தவ சக்தியில் மறையும்; இயல்பு முழுவதும் ஒரு சுதந்திர, அனந்த தெய்வசக்திக் கடலாகப் பாயும். அந்த அமைதியின் அடிப்படையில், அந்த ஒளி வானில், கடவுட் சித்தத்துடன் ஒன்றிய கடவுள் ஞானத்தின் வெளிப்பாடாகவே எல்லாச் செயல்களும் நடைபெறும். கட்டுண்ட, குறுகிய எல்லைகளையுடைய சத்வ, இராஜச,

Koviloor Digital Library

தமோகுணப் போராட்டம் மாறி அதனிடத்தில் ஜோதியும் தவசக்தியும் சாந்தமும் இசைவுடன் மருவிக் கலந்து ஒளிரும் அனந்த நிலை இதுவே ஆகும்.

இந்த உன்னத நிலையை அடையுமுன்பே, அதை நோக்கிச் செல்லும் வழியில்தானே, உன்னுடையதல்லாத, உன்னுடைய உடலைத் தனதாக்கி அதை நிரப்பிக் கொண்டிருந்த போதிலும் அதில் இடம் பெற்றிராத, மாபெரும் சக்தியொன்று உனக்காக நினைத்து, உனக்காக உணர்ந்து, உனக்காகச் செயல்படுவதையும், உனது மனமும் இதயமும் உடலும்கூட உன்னுலன்றி அச்சக்தியினுலேயே இயக்கப்படுவதையும் நீ காண்பாய். அந்நினைப்புகளை, உணர்ச்சிகளை, செயல்களை நீ அனுபவிப்பாய்; ஆனுல், அவற்றை உடைமையாக்கவோ அவற்றின் உடைமையாகவோ மாட்டாய். கடற் பரப்பிலிருந்து அலையொன்று மறைவதைப் போல, தாமரை இலையிலிருந்து தண்ணீர் உருண்டோடிப் போவதைப் போல உனது செயல்கள் உன்னிடம் எந்த வடுவையோ அடையாளத்தையோ விடாமல் மறைந்துபோகும். உனது மனமும், இதயமும், உடலும் உன்னவையாக இரா; அவை கடவுளுடையவையாக இருக்கும்; கடவுளின் உண்மையும் ஞானமும் ஆனந்தமும் இறங்கி வேலை செய்வதற்கான ஓர் ஆதார மையமாக மட்டுமே நீயும் இருப்பாய். இதுவே ஒருவன் தனது ஜீவனின் எல்லாப் பாகங்களிலும் முழுதுற இறைவனுக்கே ஆட்பட்டிருக்கும் நிலை. ''அகங்காரத்திலிருந்து விடுபட்டவன், புத்தியில் களங்கம் ஏற்காதவன்'' என்று வருணிக்கப்பட்டிருக்கும் நிலையின் பூரணமான நிறைவேற்றம் இதுதான். இதுவே ஸ்ரீ கிருஷ்ணன் அதிக முக்கியத்வம் கொடுக்கும் கர்ம சமர்ப்பணம்.

Koviloor Digital Library

''எல்லாச் செயல்களையும் என்மீது போட்டுவிட்டு, உன் ஜீவன் முழுவதும் அத்யாத்ம யோகத்தில் கூடி, ஆசையினின்றும் மோகத்தினின்றும் விடுபடு. போர் செய், உனது ஆன்மாவின் காய்ச்சல் உன்னை விட்டு நீங்கட்டும்.''

இப்பெரிய, முழுமையான விடுதலைக்கு நீ அவாவற்ற வனாக, துவந்தங்கள் அற்றவனாக, அகங்காரமற்றவனாக இருக்க வேண்டியது அவசியம்; ஏனெனில், இம்மூன்றும் சரணாகதியின் முக்கியப் பகையாகும். நீ துவந்தகளற்ற வனாக இருந்தாலன்றி அவாவற்றவனாக இருத்தல் அரிது. ஏனெனில், ஒவ்வொரு துவந்தமும் மனத்தில் ஒருவகை ராகத்துவேஷத்தை—விருப்பு வெறுப்பு, கவர்தல் விலக்கல் ஆகியவற்றை — உண்டாக்குகின்றது. அதுவே மனத்தின் இயல்பு. அவை எல்லாவற்றிலும் தாழ்ந்த துவந்தங்களான, உடல் மூலம் மனத்தைத் தொடும் பசி தாகம், வெப்பம் குளிர், உடலின்பம் உடல் வேதனை ஆகியவைகளாக இருக் கலாம்; அல்லது, உணர்ச்சிகள் ஆசைகள்மூலம் மனத்தை தொடும் கைகூடல் கைகூடாமை, வெற்றி தோல்வி, அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டம், இன்பம் துன்பம், மகிழ்ச்சி துக்கம், பகை அன்பு போன்ற இடைப்பட்ட துவந்தங்களாக இருக்கலாம்; அல்லது, பகுத்தறியும் புத்தியின்மூலம் மனத் தைத் தொடும் பாவ புண்ணியம், அறிவுக்குப் பொருந்துதல் அறிவுக்குப் பொருந்தாதிருத்தல், தவறு சரி போன்ற உயர்ந்த துவந்தங்களாக இருக்கலாம். அனைத்திலும் கடவுளைக் கண்டு அதன்மூலம் அவனுடைய பெரிய விஸ்வ திட்டத்தில் பொருள்களுக்கிடையே உள்ள உறவுகளை அறிய வல்ல பூரண ஞானம் அல்லது எல்லாமே தெய்வக் காதலனிடமிருந்தே வருகின்றபடியால் எல்லாவற்றையும் மகிழ்ச்யுடனும் ஏற்று அதன்மூலம் துவந்தங்களை நீக்கிடும்

Koviloor Digital Library

பூரண பக்தி அல்லது பொதுவாக எல்லாக் கர்மத்தையும் தொடரும் கைகூடல் கைகூடாமை, புகழ் இகழ் முதலிய துவந்தங்களை யெல்லாம் உதாசீனம் செய்து எல்லாக் கர்மங்களையும் கடவுளுக்கு வேள்வியாகவே அர்ப்பணம் செய்யும் பூரணமான கர்மம் இவற்றின்மூலமே அவாவையும் துவந்தங்களையும் அகங்காரத்தையும் வெற்றிகொள்ள முடியும். இத்தகைய ஞானமும் இத்தகைய பக்தியும் இத்தகைய கர்மமும் சரணுகத சங்கல்பம் செய்து அதன்படி நடந்தால் அதன் இறுதிப் பலனுக நிச்சயமாக வரும்.

அகங்காரமே, விஷயங்களுக்கு நம்முடனும் நம்மைச் சார்ந்தவைகளுடனும் ஏற்பட்டுள்ள உறவு, அதன் விளைவு கள் ஆகியவற்றையே வாழ்க்கைச் சட்டமாகக்கொள்வதன் மூலம், துவந்தங்களை நம்மைக் கட்டும் விலங்காக ஆக்கு கின்றது.

நமது வாழ்வின்மீதும் நமது சாதனைமீதும் செயல்படும் அகங்காரம் ரஜோகுணம் கொண்டது, தாமோகுணம் கொண்டது, சத்வகுணம் கொண்டது என மூன்று வகை யாக இருப்பதைக் காணலாம். ரஜோகுணம் செயலின்மீது உள்ள ஆசையினுலும் அவாவினுலும் நம்மைக் கட்டுகிறது. அது எப்பொழுதும் செயலையும் செயற்பலனையுமே நாடித் திரிகிறது. ரஜோகுண அகங்காரத்தினின்றும் விடுபடவே ''பலனை விரும்பி வினை செய்யாதே'' என்ற கட்டளையும் நமது செயல்களையெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணித்து விடவேண்டும் என்ற கட்டளையும் உள்ளன. பலவீனத்தின் மூலமும் இயல்பிலுள்ள செயலற்று ஒய்ந்திருக்கவேண்டு மென்னும் அவாவின்மூலமும் தமோகுணம் நம்மைக் கட்டு கிறது. அது எப்போதும் சோம்பல், சோர்வு, மனக்குழப் பம், அச்சம், ஏமாற்றம், உளமழிதல், நம்பிக்கை இழத் தல் இவற்றிலேயே அமிழ்ந்துபோகிறது. தமோகுண அகங்

Koviloor Digital Library

காரத்தை விட்டொழிப்பதற்கே ''செயலற்றுச் சும்மா இருப்பதில் பற்று வையாதே'' என்ற கட்டளையும், முன்னேறுவதாகத் தோற்றினும், முன்னேருமல் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருப்பதாகத் தோற்றினும், பின்னேக்கியே போவதாகத் தோற்றினும் அமைதியான நம்பிக்கையுடனும், பொறுமையான, உற்சாகமான விடாமுயற்சியுடனும் தொடர்ந்து யோகசாதனை செய் என்ற போதனையும் உள்ளன. சத்வகுணம் அறிவின்மூலமும் இன்பத்தின்மூலமும் கட்டுகிறது. ஏதோ ஓர் அரைகுறையான சித்தி, தனது சொந்தச் சீலத்தைப்பற்றிய உயர்ந்த எண்ணம், தனது சொந்த அபிப்பிராயங்களும் கொள்கைகளுமே சரியானவை என்ற கருத்து ஆகியவற்றில் அது எப்பொழுதும் பற்று வைக்கிறது. உச்ச நிலையில், அர்ஜுனன் செய்ததுபோல, இறைவன் கோருகிறபடி தனது சித்தத்தை அவனுக்கு சரணுகதி செய்யாமல், பொதுநலம், நீதி, புண்ணியம் பற்றிய தனது சொந்தக் கருத்தையே பாராட்டுகிறது. சத்வகுண அகங்காரத்திலிருந்து தப்பவே பாவம் புண்ணியம் என்னும் துவந்தத்தைத் தாண்டிச் செல்லவேண்டியதிருக்கிறது.

சரணுகத சங்கல்பம் செய்துவிட்ட, ஆனல், இன்னும் பூரண சரணுகத நிலையை அடையாத சாதகனுக்கு ஒவ்வொரு குணமும் அகங்காரத்தின்மீது வேலைசெய்து ஒவ்வொரு வகையில் ஆபத்தாகிறது. ரஜோகுணத்தின்மூலம் இவ்வாறு ஆபத்து வரும். சாதகன் ''நான் பெரிய சாதகன், நான் ஆன்மீகத்தில் வெகுதூரம் முன்னேறியிருக்கிறேன், நான் கடவுளின் கையில் ஒரு பெரிய கருவி'' என்ருே இது போலவோ நினைப்பான். இது கடவுளின் பணி, இது எப்படியும் நிறைவேற வேண்டும் என்று வேலையில் பற்றுக்கொண்டு முழு மூச்சாக வேலையில் இறங்கி, கடவுளின் காரியத்தில்

Koviloor Digital Library

கடவுளைவிடத் தனக்கு அதிக அக்கறை இருப்பதுபோலவும் கடவுளைவிடத் தான் நன்ருகச் செய்யமுடியும் என்பதுபோல வும் அலட்டிக்கொள்வான். பலர் ரஜோகுண அகங்காரத் தில் வேலை செய்துகொண்டே, கடவுளே தங்கள்மூலம் வேலை செய்கிருன் என்றும் தங்களுக்கு வேலையில் எந்தப் பங்கும் இல்லை என்றும் நம்புகின்றனர். இதற்குக் காரணம் என்ன வென்ருல், அவர்கள் சரணுகத தத்துவத்தை புத்தி அளவில் ஏற்றுக்கொண்டு அதோடு திருப்தியடைந்துவிடுகிருர்கள். அது அவர்களுடைய ஜீவன் முழுவதையும் நிரப்பும்வரை அவர்கள் காத்திருப்பதில்லை. கடவுள் பிறரிடமும் இருக் கிருன் என்பதை இடைவிடாது நினைக்கவேண்டும்; சொந்த ஆவலை விட்டு விடவேண்டும். கடவுள் ஆத்ம ஞானத்தின் பூரண ஒளியால் உன்னை நிரப்பி, தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் ஆபத்திற்கு இடமே இல்லாதபடி செய்யும்வரை உனது உள் இயக்கங்களை விழிப்புடன் கவ னித்து வரவேண்டும்.

தமோகுணத்தினுல் வரும் ஆபத்து இருவகையானது. புருஷன் தன்னிடமுள்ள தமோகுணத்துடன் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு, ''நான் பலவீனமானவன், பாவி, இரங்கத்தக்கவன், மூடன், ஒன்றுக்கும் உதவாதவன், அவனைவிடத் தாழ்ந்தவன், இவனைவிடக் குறைந்தவன், அதமன், கடவுள் என்மூலம் என்ன செய்யமுடியும்?'' என்று எண்ணுகிருன். தனது கருவிகளின் தற்காலிக நிறைவு குறை வுகளுக்குக் கடவுள் கட்டுப்பட்டவனல்ல. அவன் ஊமை யைப் பேசச் செய்யவும் முடவனை மலை தாண்டச் செய்யவும் வல்லவன் அன்ருே? மேலும், சாதகன் சாந்தியை—எதிர் மறையான பலமான சாந்தியை — அனுபவித்தவுடன், எல்லாத் தொல்லைகளிலிருந்தும் விடுதலையடைந்துவிட் டோம், சாந்தியைப் பெற்றுவிட்டோம் என்று திருப்தி

Koviloor Digital Library

யடைந்து, வாழ்விலிருந்தும் செயலிலிருந்தும் விலகி, செயலின்றிச் சும்மா இருப்பதிலுள்ள சாந்தியிலும் சுகத்திலும் பற்று வைக்கிருன். இவை தமோகுணத்திஞல் ஏற்படும் அபாயங்கள். நீயும் பிரமன், தெய்வ சக்தி உன்னிடம் வேலேசெய்கிறது என்பதை நினைவில் வை; கடவுளின் சர்வ வல்லமையையும் லீலையிலுள்ள அவனுடைய ஆனந்தத்தையும் அடைவதற்கு எப்போதும் முயல். உலகம் தர்மம் குலேந்து அழிந்துபோகாமலிருக்கும் பொருட்டுத் தொழில் செய்யும்படி அவன் அர்ஜுனனுக்குச் சொல்கிருன். உலகம் மீண்டும் பிரகிருதியில் மூழ்கி விடுவது அவன் விருப்பமன்று. தான் தொழில் செய்வது போலவே நீயும் தொழில் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிருன்.

''நான் தொழில் செய்யாவிட்டால் இவ்வுலகங்களெல்லாம் தமோகுண வசப்பட்டு பிரகிருதியில் மூழ்கிவிடும்'' என்கிருன்.

செயலின்மையில் பற்றுவைப்பது நமது செயலேக் கடவுளிடம் ஒப்படைப்பதாகாது, நமது தமோகுண அகங்காரத்திடம் கொடுத்து விடுவதாகவே ஆகும்.

சாதகன் தனது தர்க்க புத்தியின் ஒருதலேப்பட்ட முடிவில் பற்று வைத்தலும், சாதனேயின் ஒரு குறிப்பிட்ட கிரியையில் அல்லது இயக்கத்தில் பற்று வைத்தலும், ஒரு குறிப்பிட்ட யோக சித்தியில், உதாரணமாக தூய்மை உணர்வு அல்லது ஏதாவது சக்தி பெறுவது அல்லது கடவுளுடன் தொடர்பு கொள்வதஞல் ஏற்படும் ஆனந்தம், முக்தி உணர்வு இவற்றில் எதன்மீதாவது வேட்கையுற்று, அதன்மீது மட்டுமே பற்றுக்கொண்டு வெருென்றையும் நாடாதிருத்தலும் சத்வ குணத்திலுள்ள அபாயம். யோகம் உனக்காகவன்று என்பதை நினைவிற்கொள். இவையெல்லாம் யோக சித்தியின் பாகமேயாயினும், சித்தியின் நோக்

அழகப்பா பல்கலைக்கழகம்
Acession No.

Koviloor Digital Library

கம் அவையன்று. தொடக்கத்திலேயே கடவுளிடம் எதையும் கோருவதில்லை, அவனுகத் தருவதை மட்டுமே பெற்றுக்கொள்வது என்று தீர்மானித்திருப்பதை மறந்துவிடாதே. அதுவே கடவுளின் சித்தமாயிருந்தால் சுயநலமற்ற தொண்டன் கடவுள் சாந்நித்யத்திஞல் வரும் ஆனந்தத்தைக்கூடத் துறந்துவிடுவான். நீ, மிகவுயர்ந்த சாத்வீக அகங்காரத்திலிருந்தும் முக்தி விரும்பும் நுட்பமான அஞ்ஞானத்திலிருந்தும்கூட விடுபட்டு எல்லா மகிழ்ச்சியினையும் உவகையினையும் பற்றின்றி அனுபவிக்க வேண்டும். அப்பொழுது கீதை கூறும் சித்தன் அல்லது பூரண மனிதன் ஆவாய்.

ஆக, இவையே யோகத்தின் செய்முறைகளாகும்: (1) ஆத்ம சமர்ப்பண சங்கல்பம் (2) ஆத்ம ஞானத்தின்மூலம் ஆதாரத்தினின்றும் விலகி நிற்றல் (3) எங்கும் எப்பொருளிலும் எந்நிகழ்ச்சியிலும் கடவுளைக் காணுதல், வினைப் பயன்களோடு வினையையும் கடவுளுக்கு அர்ப்பணித்து, அதன் மூலம் அஞ்ஞானத்திலிருந்தும் அகங்காரத்திலிருந்தும் துவந்தங்களிலிருந்தும் ஆசையிலிருந்தும் விடுபட்டு சுத்த முக்த சித்தனுய் ஆனந்தத்தில் திளைத்தல். ஆனுல், ஆத்ம சமர்ப்பண சங்கல்பம் செய்து விட்டபின் கடவுளுடைய சக்தியே, மகா சக்திவாய்ந்த இயற்கை முறையில் ஒவ்வொரு படியாக சாதனையை நிறைவேற்றி வைக்கும். உன்னிடம் அனுமதியும் மறதியின்மையுமே இன்றியமையாதவை. அனுமதியாவது—உன்னுள் நடைபெறும் யோக இயக்கங்களுக்கும், உன்னுள்ளும் உனக்குப் புறத்தேயும் நிகழ்கின்றவை அனைத்திற்கும் இவையெல்லாம் சாதனையில் நடக்கவேண்டியவை, சாதனையில் ஒரு பாகம் என்று நீ தற்காலிக அனுமதி தரவேண்டும். நன்மை ஏற்பட்டால் விம்மிதம்கொள்ளவோ, தீமை நேர்ந்

Koviloor Digital Library

தால் உளேதலோ செய்யாமல், நன்மையானதை வைத்துக் கொள்ளவோ தீமையானதைக் களேந்தெறியவோ உள்ளத்தில் போராட்டம் ஏதும் இன்றி இருந்து, இறுதியான சித்தியையே எப்பொழுதும் மனத்தில் இருத்திக்கொண்டு அதற்கே நிரந்தரமான உடன்பாடு நல்கவேண்டும். தற்காலிக அனுமதியென்றுல் பலன்களே விரும்பி ஏற்றுக்கொள்ளாமல் கையாளப்படும் முறைகளுக்கு எதிர்ப்பின்றி இணங்குதல் ஆகும். நிரந்தர அனுமதி என்பது வரப்போகிற பலன்களே முன்னதாகவே எதிர்பார்த்து ஏற்றுக்கொண்டு விடுதல், முயற்சியின்றி ஆசையின்றி இச்சா சக்தியைப் பிரயோகித்தல் எனலாம். இடைவிடாது இந்த ஆசையற்ற இச்சா சக்தியை உபயோகித்தலும், தீவிரமான ஆர்வமும், யோக வழியையும் இலட்சியத்தையும் இடைவிடாது நினேத்திருப்பதுமே சாதகனுக்குத் தேவையான ஆன்மீகப் பொறுமையும் (dhrti) உற்சாகமும் ஆகும். கிளர்ச்சியுற்ற, உணர்ச்சிமீறிய ஆவலில் தீவிரம் இருக்குமெனினும், அது விரிவான ஆற்றலுடையதாக இருக்காது; அமைதியைக் குலேத்து களேப்பை உண்டாக்குவதாய் இருக்கும்; இலட்சிய நாட்டத்தில் தீவிர இன்ப துன்பங்களேக் கொடுக்கும். ஆனுல், அதனுல் பெறும் சித்தி அவ்வளவு விரிவான ஆனந்தமாக இராது. இந்த யோகத்தை பின்பற்றுவோர் தீரர்களாக இருக்கவேண்டும். உபநிடதங்களில் தீரன் என்ற சொல்லுக்கு உயர்ந்த மதிப்புண்டு. நினேவில் வைத்திருப்பதில், ஸ்மரணத்தில், கவனக்குறைவு கூடாது. குணங்களின் தாக்குதலினுல் உண்டாகும் மறதி காரணமாகவே யோகி பிரஷ்டனுகிருன், வழிதவறிச் செல்கிருன். உணர்வில் மூட்டம் ஏற்பட்டு இந்த வீழ்ச்சியுற்ற அல்லது இருள்மூடிய நிலே விடாப்பிடியாக நீடிப்பதுபோல் தோற்றினுல் அதற்காக நீ கவலேப் படவேண்டாம். ஏனெ

Koviloor Digital Library

னில், நீ நிரந்தரமாக வீழ்ந்துவிடுவாய் என்று பயப்படத் தேவையில்லை. கடவுளே உனது முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளான். நீ தடுக்கி விழுந்தாலும், தடுக்கி விழுவதால் உனக்கு அதிக நன்மை ஏற்படும் என்பதினு லேயே அவ்வாறு விழுந்திருப்பாய். அடிக்கடி விழுந்து விழுந்துதானே குழந்தை நடக்கக் கற்றுக்கொள்கிறது? இடைவிடாமல் எல்லாப் பொருள்களிலும் எல்லா நிகழ்ச் சிகளிலும் கடவுளை நினைந்துகொண்டிருந்தால் — கீதை குறிப்பிடும் 'நித்ய அனுஸ்மரணம், — 'அப்பிரமாத'னுக, யோகத்தையும் அதன் இலட்சியங்களையும் நினைத்துக் கொண்டிருப்பவனுக, இருக்கவேண்டிய தேவை கூட இல்லை. தொடக்கத்திலிருந்தே பூரண சரணுகதி செய்துவிட கூடியவர்களுக்குக் கேள்வியே இல்லை. அவர்களுடைய வழி மிக மிக வேகமானது, எளிதானது.

யோகத்தில் சித்தி பெறுவதற்கு சாஸ்திரம், உற்சாகம், குரு, காலம் ஆகிய நான்கும் தேவை என்று 'சனத்சுஜா தியா'வில் கூறப்பட்டுள்ளது. சாஸ்திரம் என்பது வழியைப் பற்றிய போதனை, உற்சாகம் என்பது வழியைப் பின்பற்று வதிலுள்ள ஆர்வ வேகம். நான் காட்டிக்கொண்டிருப்பதே உனது வழி; முன் விளக்கிய அனுமதியும் 'நித்ய ஸ்மரண' முமே தேவையான உற்சாகம்; கடவுளே குரு. மற்றவைக் கெல்லாம் காலமே தேவை. கடவுளே குரு என்பதை ஞானம் வரும்போது நீ அறிவாய்; உன்னுள்ளும் புறத்தே யும் ஒவ்வொரு சிறு சந்தர்ப்பமும் யோகம் நடக்க அனந்த ஞானத்தினுல் மிக நுட்பமாகத் திட்டமிட்டு நிகழ்த்தப் பட்டுள்ளது என்பதைக் காண்பாய்; உன்னிடமுள்ள குறை களை நீக்கிப் பூரண நிலையை ஏற்படுத்துவதற்காகவேண்டி அக இயக்கங்களும் புற இயக்கங்களும் எவ்வாறு ஒழுங்கு படுத்தப்பட்டு ஒன்றின்மீது ஒன்று செயல்படும்படி செய்யப்

Koviloor Digital Library

பட்டது என்பதைக் காண்பாய். சர்வ வல்லமையுள்ள ஓர் அன்பும் ஞானமும உன்னை உயர்த்த வேலைசெய்கின்றது. ஆகவே, மிக நீண்ட காலம் ஆவதுபோலத் தோற்றினுலும், காலம் ஆகிறதே என்று கவலைப்படாதே. குறைகளும் தடைகளும் எழும்போது நிலை தடுமாருமல், தீரமுடனும் உற்சாகத்துடனும் இருந்து, மற்றவற்றையெல்லாம் கடவுளே செய்யும்படி விட்டுவிடு. போதிய காலம் வேண்டும். உன்னுள் மகத்தான காரியம் செய்யப்படுகிறது, உனது மனித இயல்பு முழுவதும் தெய்வ இயல்பாக மாற்றப்படுகிறது. பல நூற்ருண்டுப் பரிணும வளர்ச்சியைச் சில ஆண்டுகளுக்குள் செய்யவேண்டியதிருக்கிறது. அதற்குப் போதுமான காலம் கொடுக்க நீ தயங்கக்கூடாது. உடனடி பலன் தருவதாகச் சொல்லும் பிற வழிகள் உள்ளன. அவை நீயே செய்யக்கூடிய சில குறிப்பிட்ட கிரியைகளைக்காட்டுகின்றன. அவை நீ ஏதோ உருப்படியான காரியம் செய்துகொண்டிருக்கிருய் என்கிற திருப்தியை உனது அகங்காரத்திற்கு அளிக்கின்றன—இன்று இத்தனை பிராணுயாமம் செய்தேன், இவ்வளவு அதிக நேரம் ஆசனம் பழகினேன், இவ்வளவு அதிகத் தடவை மந்திரம் ஜெபித்தேன், இவ்வளவு செய்தேன், இவ்வளவு முன்னேறியிருக்கிறேன் எனக் கணக்கிடும்படியாக இருக்கிறது. ஆனுல், இந்த வழியைத் தேர்ந்தெடுத்துவிட்டபின் நீ அதைச் சிக்கெனப் பற்றிக்கொள்ள வேண்டும். அவையெல்லாம் மனித முறைகள். அனந்த சக்தி அவ்வாறு வேலைசெய்வதில்லை. அது ஓசைபடாமல், சிலசமயம் நமக்குப் புலப்படாதபடி, தனது இலட்சியத்தை நோக்கிச் செல்கிறது; இங்கே முன்னேறுகிறது, அங்கே சற்று நிற்பதாகத் தோற்றுகிறது; பின் தான் செய்து முடித்த மகத்தான காரியத்தை வலிமையுடனும் வெற்றிக் கம்பீரத்துடனும் வெளிப்படுத்துகிறது. செயற்கை வழிக

Koviloor Digital Library

ளெல்லாம் மனித அறிவைக்கொண்டு அகழ்ந்த வாய்க் கால்கள் போன்றவை. அவைகள் வழியாக நீ எளிதாக ஆபத்தில்லாமல், நிச்சயமாகப் பிரயாணம் செய்யலாம். ஆனால், குறிப்பிட்ட ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்கே நீ போகமுடியும். இவ்வழியோ பரந்த தடமில்லாத மா கடல். இதன் வழியே நீ அகலப் பிரயாணம் செய்யலாம், உலகின் எப்பகுதிக்கும் செல்லலாம். இங்கு நீ அகண்டப் பொருளின் சுதந்திரத்தைப் பெற்றுவிடுகிறாய். உனக்குத் தேவை கப்பல், சுக்கான், திசைகாட்டும் கருவி, இயந்திர விசை, திறமையுள்ள மீகான். பிரம்ம வித்தையே உன் கப்பல், நம்பிக்கையே சுக்கான், சரணாகதியே உனது திசை காட்டி, கடவுளின் ஆணைப்படி உலகங்களை ஆக்கி, இயக்கி, அழிப்பவளாகிய மகாசக்தியே இயந்திர சக்தி, கடவுளே உன் மீகான். அவனால், அவனுக்கே உரிய செய்முறை கள் உண்டு, ஒவ்வொன்றிற்கும் அவன் ஒரு காலம் குறித் துள்ளான். அவனுடைய வழிகளைக் கவனி, அவனுடைய காலத்திற்காகக் காத்திரு. சாஸ்திரத்தை ஏற்றுக்கொள் வதின், குருவுக்குக் கீழ்படிவதின் முக்கியத்வத்தைப் புரிந்து கொள். சரியானபடி உய்த்துணரவோ சரியானபடி காரண காரியங்களை ஆராயவோ பயிற்சியளிக்கப்படுமுன்பே ஆராய்ந்த முடிபுகள் என்று சொல்லிக்கொள்கிற அதன் விருப்புகளையும் கற்பனைகளையும் பின்பற்றிச் செல்ல தனது சொந்த புத்திக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும் என்று ஐரோப்பியர் வற்புறுத்துவதுபோல் நீயும் செய்யாதே. மாயையைப்பற்றியும் அத்வைதம்பற்றியும் தத்துவச் சர்ச் சைகள் நடத்துவதும் அவைகளுக்கு முதன்மை கொடுத்து ஆன்மீக அனுபவத்தின் இடத்தில் அவற்றை ஏற்றிவைப் பதும் நவநாகரிகப் பழக்கமாகிவிட்டது. அந்தப் பழக் கத்தைப் பின்பற்றாதே. வழியில் கேள்விகள் கேட்டுக்

Koviloor Digital Library

கொண்டு நேரத்தை வீணடிக்கவும் மனத்தைக் குழப்பிக் கொள்ளவும் செய்யாதே. உன்னுள் அதிமனத்தின் தெய்விக ஞானம் விழித்தெழும்போது அவைகளுக்குத் தாராளமாகவும் ஞானஒளியுடனும் பதில்கள் கிடைக்கும். தத்துவ ஞானத்திற்கும் ஓர் இடம் உண்டு. அது ஆன்மீக அனுபவத்திற்குத் தாதிபோல் இருக்கவேண்டும். சில சமயம் அதற்கு உதவலாம். பெரும்பாலும் அது ஆன்ம அனுபவத்தை அண்டி அதன் வண்மையில் வாழவேண்டும். தன்னளவில் அது வெறும் பயனற்ற வறட்டுப் பாண்டித்தியமே. பெரும்பாலும் ஆன்மீக முயற்சிக்கு உதவியாக இல்லாமல் தடையாகவே அது இருக்கும். இந்த வழியை ஏற்றுக் கொண்டபின் தேவையற்ற சந்தேகத்தையும் கேள்விகளையும் விட்டுவிட்டு அதன் சாஸ்திரத்தையே பின்பற்று. மனத்தை மேலிருந்து வரும் உயர் ஞானத்திற்கு இளக்கமாக வைத்திரு; கிடைத்த அனுபவத்தைக் கெட்டியாகப் பற்றிக்கொள்; உனக்கு விளங்காத விஷயங்களில் ஒளிக்காகக் காத்திரு; இவ்வழியில் ஏற்கனவே சென்றுள்ள உயிருடனிருக்கும் வழிகாட்டிகளிடமிருந்து கர்வமின்றி முடிந்த உதவியைப் பெற்றுக்கொள்; எப்பொழுதும் பொறுமையுடனிரு; அவசரப்பட்டுக் குறுகிய முடிவுகள் செய்யாமல் மேலும் முழுமையான அனுபவமும் பூரணமான ஒளியும் வருவதற்குக் காத்திரு; உள்ளிருந்து உனக்கு உதவுகின்ற ஜகத்குருவை நம்பியிரு.

மாயா வாதத்தைப்பற்றியும் அத்வைதத்தைப்பற்றிய தற்காலப் போதனைகள்பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். ஏனெனில், இப்பொழுது அவை அதிகமாகப் பேசப்பட்டு பலருடைய மனத்தைக் குழப்புகின்றன. அவற்றுள் ஐரோப்பியப் பகுத்தறிவுவாத, ஐயுறவுவாதக் கருத்துகள் புகுந்துள்ளன. அதற்குச் சங்கரரைப் பொறுப்பாக்கியி

Koviloor Digital Library

ருப்பதை அவர் அறிந்தால் ஆச்சிரியப்படுவார். ஒரு சார்பான தத்துவங்களெல்லாம் உண்மையைப் பற்றிய அரை குறைக் கூற்றுகளே என்பதை நினைவிற்கொள். கடவுள் படைத்த இவ்வுலகம் வளைவுநெளிவற்றதர்க்கவாத வித்தையன்று; அது இசையைப்போல எண்ணற்ற வேற்றுமைகள் இயைந்து நிற்கும்ஒன்று. கடவுள் சர்வசுதந்திரனுக, எதையும் சார்ந்திராமல் தனித்து நிற்பதால் அவன் இருப்பை தர்க்க ரீதியாக வரையறுக்க முடியாது. எல்லாச் சமயங்களின் உண்மையையும் அனுமதிக்கும் சமயமே சமயங்களில் சிறந்தது ஆவது போல, எல்லாத் தத்துவக் கொள்கைகளின் உண்மையையும் அனுமதித்து அவற்றிற்குரிய சரியான இடத்தைக் கொடுக்கும் தத்துவக்கொள்கையே தத்துவக் கொள்கைகளுள் சிறந்தது ஆகும். மாயை என்பது ஓர் அனுபவம், ஒரு முக்கியமான அனுபவம். அவருடைய அனுபவத்திற்கு அதுவே மிகத் தெளிவாக இருந்தபடியால் சங்கரர் அதை அளவுகடந்து வற்புறுத்தினர். உன்னைப் பொறுத்தமட்டில் அந்தச் சொல்லுக்கு முதன்மை கொடுக்காமல் லீலை என்ற கருத்தில் ஊன்று. லீலை மாயையைவிட அதிக ஆழமும் நுண்மையுங் கொண்ட சொல்லாகும். லீலை மாயை என்ற கருத்தையும் கொண்டு அதற்கு அப்பாலும் செல்கிறது. லீலையில் எல்லாம் வெறுமை என்ற கருத்தின் தொடர்பு இல்லை. ஸ்ரீ கிருஷ்ணனுடன் இருந்து மதுரையிலும் பிருந்தாவனத்திலும் அவனுடன் விளையாட விரும்பும் உனக்கு அக்கருத்தினுல் பயனில்லை.

கடவுள் ஒருவனே. ஆனுல், அவன் தன்னுடைய ஒருமையில் கட்டுண்டிருக்கவில்லை. எப்பொழுதும் பலவாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவனுகவே அவனை நாம் இங்கு காண்கிருேம். அவனுல் அப்படி வெளிப்படாமல் இருக்க முடியாததனுல் அன்று, அது அவன் சித்தம்.

Koviloor Digital Library

படைப்புக்கு அப்பால் அவன் சொல்லுக்குள் அடங்காதவன் அங்கு அவனை ஏகன் என்றோ அநேகன் என்றோ வருணிக்க முடியாது. அதுவே உபநிடதங்களும் பிற புனித நூல்களும் மாருது போதித்து வரும் உண்மை. அவன் 'ஏகமேவத் விதீயம்', 'இரண்டற்ற ஒன்று'. ஆனால், அத்துடனும் அதன் காரணமாகவும் அவன் ''இம்மனிதனாகவும், அதோ அந்தப் பெண்ணாகவும், அந்நீல வண்ணப் பறவையாகவும், இவ்வொண்சிவப்பு ஒன்றாகவும்'' உள்ளான். அவன் எல்லைக்குட்பட்டவனாகவும் (santa) எல்லையற்றவனாகவும் (ananta) இருக்கிறான்; ஜீவாத்மாவாக இருப்பவனும் அவனே. "நான் அரச மரம், நான் மரணம், நான் அக்நி—வைஸ்வானரன், உணவைச் செரிக்கும் சட ராக்கினி நான், நான் வியாசன், நான் வாசுதேவன், நான் அர்ஜுனன்'' என்று ஸ்ரீ கிருஷ்ணன் கீதையில் கூறுகிறான். அனைத்தும் அவனுடைய உணர்வு (சைதன்யம்) அவனுடைய அனந்த உண்மையில் (சத்தில்) புரியும் ஆடலே, அவனுடைய தோற்றங்களே; ஆகவே, அனைத்தும் உண்மை. பிரம்மன் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் கால தேச சந்தர்ப்பங்களால் கட்டுப்படாதிருப்பதையே மாயை என்கிறோம். அவனைப்பற்றி நாம் அறிவது, நாம் எண்ணுவது இவற்றுள் அவன் அடங்கியவனல்ல. அடங்கியவன் என்று எண்ணும் மாயையிலிருந்துதான் நாம் விடுபடவேண்டும். எல்லாம் கடவுள், எல்லாம் உணர்வு (சைதன்யம்) என்று அறியாமல் பொருள்கள் தனித்து இருக்கின்றன என்று எண்ணுகின்ற, எல்லையற்றதை எல்லையுள்ளதாகவும் கட்டற்றதைக் கட்டுப்பட்டதாகவும் கருதுகின்ற அஞ்ஞானமாம் மாயையிலிருந்தே நாம் விடுபடவேண்டும். ஸ்ரீ கிருஷ்ணனையும் கோபிகளையும் பற்றிய கதை நினைவிருக்கிறதா? நாரதர் தாம் போய்ப் பார்த்த வீடுகளிலெல்லாம், ஒவ்வொரு கோபிக்கும் ஒவ்

Koviloor Digital Library

வொரு உடலில் வெவ்வேறு செயல்களில் ஸ்ரீ கிருஷ்ணன் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். ஸ்ரீ கிருஷ்ணன் எப்போதும் அதே ஸ்ரீ கிருஷ்ணனே. இக்கதையின் பக்தி பூர்வமான பொருள் உனக்குத்தெரியும். அதைத் தவிர அது அவனுடைய உலக லீலைக்கு ஒரு நல்ல உருவகம். அவன் சர்வன், எல்லாருமாக உள்ளவன். பார்வைக்குத் தனிப் பிரகிருதியும் தனிச் செயலும் உடையவனுகத் தோன்றும் ஒவ்வொரு புருஷனும் அவனே. ஆயினும், அதே சமயத்தில் பரப்பிரகிருதியாகிய ராதாவுடன் கூடிய புருஷோத்தமனும் அவனே. அவன் நினைத்த போது இவை அனைத்தையும் தன்னுள் இழுத்துக்கொள்ளவும், வெளிப்படுத்த நினைக்கும்போது மீண்டும் வெளிப்படுத்தவும் அவனுல் முடியும். ஒரு நோக்கில் அவை அவனுடன் ஒன்ருனவை; இன்னொரு நோக்கில் ஒன்ருகவும் வேருகவும் உள்ளன; மற்ருெரு நோக்கில் எப்பொழுதும் வேருனவை—ஏனெனில், அவனுள் அடங்கியோ அவன் விருப்பப்படி வெளிப்பட்டோ அவை எப்பொழுதும் இருந்து கொண்டேயிருக்கின்றன. இந்த வேறுபட்ட நோக்கு நிலைகளைப்பற்றி விவாதிப்பதில் பயனில்லை. கடவுளைக் கண்டு உன்னையும் அவனையும் உள்ளபடி அறியும் வரை பொறுத்திரு; அப்பொழுது வாதமும் தர்க்கமும் தேவையற்றவையாகிவிடும்.

நமக்கெனக் குறிக்கப்பட்ட நோக்கம் இவ்விஷயங்களைப் பற்றி ஊகஞ்செய்வது அன்று, அவற்றின் அனுபவத்தைப் பெறுவதே. கடவுளின் வடிவமாக வளர்தல், அவனிலும் அவனுடனும் வதிதல், அவனுடைய வலிமைக்கும் களிப்பிற்கும் வாய்க்காலாக இருத்தல், அவனுடைய வேலைக்குக் கருவியாக இருத்தல்—இதற்கே நாம் இங்கு அழைக்கப் பட்டுள்ளோம். எல்லா மாசுகளிலிருந்தும் சுத்தம் செய்யப் பட்டு, அவனுடைய தீண்டுதலால் அந்தராத்மாவில் உரு

Koviloor Digital Library

மாற்றமடைந்து, அத்தெய்விக மின்சாரத்தின் 'டைனமோ'க் களாக உலகில் தொழில்செய்து, அச்சக்தி மனித இனம் முழுவதிலும் சிலிர்த்து அலைவீசிப் பாயச் செய்ய வேண்டும். நம்முள் ஒருவர் எங்கு நின்ருலும் சுற்றிலும் நூற்றுக் கணக்கான பேர் அவன் ஒளியாலும் சக்தியாலும் நிரம்ப வேண்டும், கடவுளால் நிரம்பவேண்டும், ஆனந்தத்தால் நிரம்பவேண்டும். பல்வேறு மதங்கள், துறவுக் கூட்டங்கள், சமயக் கொள்கைகள், தத்துவங்கள் ஆகியவையெல்லாம் மனித இனத்தைக் காக்கத் தவறிவிட்டன. ஏனெனில், அவை மனக் கோட்பாடுகள், நம்பிக்கைகள், சடங்குகள், ஸ்தாபனங்கள், ஆசார சுத்தி, தர்சனம் இவையெல்லாம் மனித இனத்தைக் காப்பாற்றிவிடும் என எண்ணி அவற்றி லேயே கவனம் செலுத்தி, அவசியமான அந்த ஒன்றை மட்டும் விட்டுவிட்டன -- அந்தராத்மாவின் சக்தியையும் தூய்மையையும்.

நாம் அவசியமான அந்த ஒன்றை மீண்டும் போற்ற வேண்டும். மனித இனம் தூய்மையடையவேண்டும், பூரணம் பெறவேண்டும் என்ருர் கிறிஸ்து; ஆண்டவனுக்கு முற்றி லும் கீழ்ப்படிய வேண்டும், பூரணமான சரணுகதி செய்ய வேண்டும், அடிமை செய்யவேண்டும் என்ருர் முகம்மது; மனிதனில் கடவுளின் பூரண அன்பையும் களிப்பையும் காணவேண்டுமென்ருர் சைதன்யர்; எல்லாச் சமயங்களும் ஒன்று, நாம் மனிதனில் தெய்வத் தன்மையைக் காண வேண்டுமென்ருர் இராமகிருஷ்ணர். இவ்வான்மீக ஓடை களையெல்லாம் வலிமை கொண்ட பேராருக, தூய்மை செய்து கடைத்தேற்றும் கங்கையாகத் திரட்டி, பகீரதன் கங்கையைப் பாதாளத்திற்கு அழைத்துச் சென்று தனது மூதாதையரின் சாம்பல்கள்மீது அதைப் பாயச் செய்ததைப் போல உயிரோடு செத்துபோயிருக்கும் லோகாயத மனித

Koviloor Digital Library

இனத்தின்மீது பெருக்கெடுக்கச் [illegible] அப்பொழுது மனித இனத்தின் ஆன்மா புத்துயிர் பெறும், சிறிது காலத்திற்கு சத்திய யுகம் மீண்டும் உலகில் தோன்றும். லீலையின் அல்லது யோகத்தின் முழுநோக்கமும் இதுவே அன்று. நமது உழைப்பு முடிந்து நமது வேலை நிறைவேறி, இங்கு, இந்தச் சடப் பிரபஞ்சத்திலேயே எல்லாரிடமும் சச்சிதானந்தம் பூரணமாகப் பொலியும்வரை மீண்டும் மீண்டிம் மனிதனை உயர்த்துவது, அவனிடத்தில் மேலும் மேலும் சிறந்த மனிதப் பண்புகளை வளர்ப்பது, மேன்மேலும் தெய்வத் தன்மையை வளர்ப்பது, அதிகம் அதிகமாக மீண்டும் மீண்டும் வானகத்தை வையகத்திற்குக் கொண்டுவருவது — இதுவே அவதாரங்கள் வருவதன் நோக்கம். தனது சொந்த முக்திக்காக அல்லது ஒரு சிலரின் முக்திக்காக முயல்கின்றவன் முயற்சி, அஃதில் அவனுக்கு வெற்றி கிடைப்பினும், மிகச் சிறியது. மனித இனம் முழுவதற்கும் ஆத்ம சாந்தியையும், களிப்பையும், தூய்மையையும், பூரணத்தையும் கொண்டுவர முயல்கின்றவனுடைய முயற்சி, அதில் அவன் சிறிதளவே அல்லது சிறிது காலத்துக்கே வெற்றி பெறினும், அன்றித் தோல்வியையே தழுவினும், அது அனந்தம் மடங்கு பெரிது.

Alagappa University
Central Library
37431

பல்கலை
வளா தமிழ்
நூலகம்
காரைக்குடி